வும், ஒழுங்குபடுத்தவும், மக்களைத் திருப்திப்படுத்தவும் அரசு முயலும் என்று கூறி துணை மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு முடிக்கின்றேன்.

திரு. கே. ராஜாராம் : நிதி அமைச்சர் அவர்களின் பதில் மிக
6-30 p.m. விளக்கமாகவும் தெளிவாகவும் இருந்தது. குறிப்பாக போக்குவரத்துத் துறைபற்றி வெகு ஆழ்ந்த கருத்துக்களை, நமக்கெல்லாம் தெரியாத விஷயங்களைச் சொல்லித் தெளிவுபடுத்தினார்கள். நான் பல முக்கிய விஷயங்களைப்பற்றிக் கூறினேன். அதில் ஒன்றுக்குக்கூட எந்த விதமான பதிலும் சொல்லப்படவில்லை. அரசாங்கம் கவனிக்கும் என்று ஒரு வார்த்தைகூட சொல்ல விட்டுவிட்டார். ஒருக்கால் நேற்று நான் பேசியிருந்தால், அமைச்சர் அவர்கள் பதில் தயாரித்திருப்பாரோ என்னவோ ? சின்ன விஷயம் அல்ல. அதிலும் முக்கியமாக விசைத்தறி, ஸ்டாண்டார்டு மோட்டார்ஸ் லாக்கவுட்...

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவைகள் எல்லாம் தொழில் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள். அவருடன் கலந்து பேசி உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் எந்த விஷயங்களையும் உரிய தகவல்கள் இல்லாமல் பேசுவது பழக்கமல்ல. தெரியாத விஷயத்தில் நான் எப்போதும் தலையிடுவது இல்லை.

திரு. கே. ராஜாராம் : முக்கியமாக ஒரு ஜில்லாக் கலெக்டர் மீது குற்றச்சாட்டு கூறினேன். அதை எல்லாம் அரசாங்கம் தக்கவாறு ஆலோசிக்கும் என்று ஒரு வார்த்தைகூட சொல்ல விட்டுவிட்டார் என்று கூறினேன். வேறு ஒன்றும் இல்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

V. NON-OFFICIAL BUSINESS

The Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1970.
(L.C. Bill No. 1 of 1970)

*THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I move —

"That the Code of Criminal Procedure (Tamil Nadu) Amendment Bill, 1970 (L.C. Bill No. I of 1970) be taken into consideration."

THIRU G. VASANTHA PAI : Sir, I second the motion.

MR. CHAIRMAN : Motion moved —

"That the Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1970 (L.C. Bill No. I of 1970) be taken into consideration."

---

*Published on pages 49-54 of Part IV-Section 3 of the Fort St. George Gazette (Extraordinary), dated the 1st April, 1970.

TRUTH ALONE TRIUMPHS

1st September 1970]

*THIRU D. SANTOSHAM : Sir, several years ago, I was invited to become a Member of the Rotary Club in Madurai. The classification of membership under which I was invited to join it was as a lawyer, criminal. Sir, I am not a "lawyer, criminal," and I am not a member of the Rotary Club yet. But, for the last 33 years, I have been a very active practitioner on the criminal side of the Bar. Out of those 33 years, for about 6 years, I have been Public Prosecutor of the Madurai District. I am not saying all these things for the sake of self-advertisement. I am quite sure that none of the Members of the House will ever be my client in any criminal case. (Cheers) The real reason why I am mentioning credentials and qualifications is this. The time is past 6.30 and many of us are anxious to catch the train. What is more, only a very few Members of this Hon. House are actually lawyers, and this is a technical subject, which lawyers alone can understand in all its implications. This part of the subject is bound to be dry and tiring to the Members also. Therefore, I do not expect the Members to follow me with the same amount of attention that they may pay to a subject with popular appeal. Therefore, I wanted to place my qualifications and credentials to inspire confidence in my experience not only as a Defence lawyer but also in my experience as a Prosecutor. I have that practical experience. I have personal experience for the last 33 years or more on both sides of the Bar, and I know where the shoe has been pinching. I want the Members to realise that I am making some practical suggestions for rectifying this by improving the present Code of Criminal Procedure. This implies nothing of a political nature ; no party politics at all is involved in this. It is purely a matter designed for making the administration of criminal justice more convenient and more efficient for the public and also for the practitioners who have to deal with it.

Before I go into the various sections that I have proposed as amendments, I would like to clear the ground with reference to the Constitution. The subject of Criminal Procedure is in the Concurrent List, List III, and both the Centre and the States have the right to legislate. The only requirement under Article 254 (2) is that once it is passed by the State Legislatures, it has got to receive the assent of the President and under the proviso to Article 254 (2), at any time the Centre can make legislation, which could supersede our State legislation. I am particularly referring to this because I want to anticipate one possible objection. Why not the Centre legislate on this and why not we wait till the recommendations of the Law Commission are made and the Central Parliament enacts a comprehensive Bill of this nature ? For one thing, I am sure the Law Commission's recommendations do not include the practical improvements that I am suggesting. They are more concerned with the difficulties of the Government, not the difficulties of the actual litigants and the actual practitioner. I have had occasion to look into the Law Commission's recommendations. They are proposing an amendment to section 144, Criminal Procedure Code, so that an order passed

under section 144, Cr. P.C., can be extended. Now the life of an order under section 144 is only two months; they want to have the power to extend it indefinitely by a sort of a ukase. Therefore, I do not expect the Law Commission to take note of amendments of this nature. Apart from that, the Centre is not likely to move very soon, at any rate, not before the next elections and even after the next elections, for at least one or two years, whichever party is in power will be concerned more
6-40 p.m. with what it announced in its own election manifesto and a mere matter of Criminal Procedure may not attract its attention for quite a long time to come. I earnestly appeal to the hon. Members, through you, Sir, that they may kindly co-operate with me in having these more practical suggestions enacted into law, so that they may at least be in existence till such time as the Centre enacts its own law for the amendment of the Criminal Procedure Code. Definitely all of us seem to agree that some amendment is necessary. When and how it has to be made, it is for us to decide. I very earnestly appeal to the Members of this House, through you, Sir, that they may have this amount of faith in the practical necessity, the need for this amendment that I am going to place before them. Now I shall take the amendments seriatim and try to explain them. I do not think that I can complete it to-day. There are 11 amendments. Even if I take 2 minutes for each amendment, it will take a long time. Therefore, I suggest that it may be taken up on the next non-official day or on the 8th.

MR. CHAIRMAN : The general discussion may be over to-day.

THIRU D. SANTOSHAM : We have to catch the trains. I have to catch the train at 9 o'clock. At any rate, I can continue till 7 p.m.

THIRU K. RAJARAM : Now we can finish the general discussion on the Bill.

THIRU D. SANTOSHAM : I have to explain the purport of this Bill. I am not taking it up clause by clause. I will have to explain the necessity for each of the amendments at least in a general way. The first amendment that I have suggested is . . .

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே அரசாங்கத்தின் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்து விட்டால், மாண்புமிகு அங்கத்தினருக்கு மிகவும் நலமாக இருக்கும். அதிகம் சிரமப்பட வேண்டாம் என்று கருதுகிறேன். நாம் எல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் சொல்லுவதை நம்ப வேண்டும் என்ற காரணத்திற்காக தனக்கு கிரிமினல் துறையில் 33 வருட அனுபவம் உண்டு என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே அதில் நம்பிக்கை கொண்டவன். மாண்புமிகு அங்கத்தினர்கள் கொண்டு வந்த இந்தத் திருத்தத்திலே அரசாங்கத்திற்குக் கருத்து வேறுபாடு கிடையாது. அங்கத்தினர் அவர்கள் லா கமிஷனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அக்கமிஷன் செய்த சிபாரிசுகள்

எல்லாம் மத்திய அரசாங்கத்தால் அமுல் செய்யப்படவில்லை என்பதையும் சொன்னார்கள். மத்திய சர்க்காரே எல்லாக் காரியங்களையும் செய்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இதற்கென்று தனியாகச் சட்டத்தைச் செய்தால் அது ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற வேண்டும். மாவட்டங்களில் கோர்ட் விடுமுறை காலத்தில் 'வெக்கேஷன் ஜட்ஜ்' சப் ஜட்ஜ் இருக்கிறார். அவருக்கு ''பெயில்'' கொடுக்கக்கூடிய அதிகாரம் இல்லை. அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று கூறுகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த மன்றத்திற்கு வந்ததிலிருந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். நான் எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்தேன். இதுவரையில் அங்கீகாரம் கொடுக்கவில்லை. இன்றைக்குத்தான் பைலைப் பார்த்தேன். கொஞ்சம் அசைந்து கொடுத்து நாங்களும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று ஒத்து வந்திருக்கிறார்கள். சி.ஆர்.பி.சி.யைப் பொறுத்த அளவில், நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அதற்காக நாம் விட்டுவிடப் போவதில்லை. அரசாங்கம் சில நாட்களுக்கு முன்னால் நம் முதலமைச்சரைக் கலந்து முடிவு எடுத்திருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதையொட்டி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். ''லா கமிஷன்'' இதுவரை சிபாரிசு செய்தாலும் செய்யாவிட்டாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், கிரிமினல் நீதி மன்றங்கள் சிவில் நீதி மன்றங்கள் இலாகாவில் உள்ள நடைமுறை விதிகள் சரி செய்யப்பட வேண்டும். இப்போது உள்ள சட்டத்தில் குற்றவாளிகள் என்று அகப்பட்டவர்கள் எப்படி துன்பப்படுகிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட சட்டத்தின் காரணமாக ''பெயில்'' வாங்க முடியாத காரணத்தால் தண்டிக்கப்படுகிறார்கள். ''பெயில்'' வாங்கச் சென்றால், நீதிபதிக்கு அதிகாரம் இல்லை என்ற காரணத்தால், பல சங்கடங்கள் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படுகின்றன. வெள்ளைக்காரன், சர்வாதிகாரி ஏற்படுத்திய சட்டங்கள்; அதை எல்லாம் மாற்ற வேண்டும் என்ற நல்ல கருத்துக்களைக் கொண்ட இந்த மசோதாவின் தாத்பரியத்தை முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கிறேன். எப்படி நிறைவேற்றுவது என்பது பற்றி நாங்களே ஆலோசித்து ஆவன செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றித் தலைமை நீதிபதியிடம் பேசினேன். அவர்களும் ஒப்புக்கொண்டார். நம்முடைய மாநிலத்திலுள்ள உயர் நீதி மன்ற நீதிபதிகளில் ஓய்வு பெற்ற நீதிபதிகளில் ஒருவரை அதற்காக நாம் நியமித்து அவர்கள் மூலமாக ஏற்கெனவே ''லா கமிஷன்'' செய்துள்ள சிபாரிசுகளைப் பரிசீலிக்கச் செய்யலாம். அப்படிச் செய்யாவிட்டாலும் கனம் அங்கத்தினர்கள் சில சாதாரண குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் சொத்து இல்லாதவர்கள் மீது சந்தேகக் கேஸ் போடலாம் 75 விதியின் கீழ். 109 விதியின் கீழ் ஜாமீன் கேஸ் போடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் பயங்கரமான சட்டங்கள்; ஜனநாயக நாட்டில் கூடாது என்று நானே வற்புறுத்தியிருக்கிறேன். எதிர்க் கட்சி உறுப்பினர்களும் வற்புறுத்தியிருக்கிறார்கள். நாம் இப்போதைக்கு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இது போன்ற சாதாரணச் சிக்கல்களைத் தவிர்க்க ஒரு உயர் நீதி மன்ற நீதிபதியை நியமிக்க வேண்டும். அவர்கள் அதற்குப் பரிகாரம் கண்டு, நாமே அதைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று

அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. பிரதம நீதிபதியும் கொள்கை அளவில் ஒத்துக்கொண்டிருக்கிறார். விரைவில் இதைப் போன்ற சட்டங்கள் கொண்டுவர இருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த மசோதாவை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று சொன்னார்கள். மசோதாவில் உள்ள கருத்துக்களை விரைவில் சட்டம் ஆக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று முன் கூட்டியே சொல்லிவிட்டால், மாண்புமிகு அங்கத்தினர் ரொம்ப விவரமாகப் பேசாமல் சுருக்கமாகப் பேசுவதற்கு ஏதுவாக இருக்கும். கொள்கை அளவில் அவருக்கும் அரசாங்கத்திற்கும் வேறுபாடு இருப்பதாகக் கருத வேண்டாம். அவரையும் கலந்து கொண்டு நிச்சயம் இது போன்ற சட்டங்களை நிறைவேற்றுவோம் என்று முன்கூட்டியே உறுதியளிக்க ஆசைப்படுகிறேன்.

*திரு. டி. சந்தோஷம் : தலைவர் அவர்களே, விடுமுறை காலத்தில் மாவட்ட நீதிமன்றங்கள் இயங்காத காரணத்தால், சாதாரண ''டெயில்'' வாங்க ஏற்பாடு இல்லாமல் இருக்கிறது. சிறு petty கேஸ், புரொகிபிஷன் ஆக்டில் போட்டால் சென்னைக்கு ஹைகோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. அதற்கு ரூ. 200, ரூ. 250 செலவழிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டுமென்று கடந்த நான்கு ஆண்டுகளாக, வற்புறுத்தி வந்திருக்கிறேன். எவ்வளவோ சிரமத்திற்குப் பிறகு, மத்திய சர்க்கார் அசைந்து கொடுக்காததால் ஓர் தீர்வு காண வேண்டிய நிலையில் வந்திருக்கிறோம். இந்த அளவுக்கு அரசாங்கத்தின் மூலம் முயற்சி செய்யாததால் தான், இவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது. நமக்கே சட்டம் இயற்றிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில். அதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? அரசாங்கம் மசோதாவின் கருத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளுகிறது என்பதற்கு மெத்த மகிழ்ச்சி. அதே சமயத்தில் இப்படிப்பட்ட மசோதா வரும்போது அதை ஆராய்ந்து ஆதரவு கொடுத்து விட்டார்கள் என்றால், மிகவும் சுலபமாக முடியும். நான்கு ஆண்டுகள் காத்துக்கொண்டிருக்க வேண்டியது இல்லை. 1966-ம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவை உறுப்பினராக இருக்கும்போது, அந்த கிரிமினல் புரொஸீஜர் கோடில் சில பகுதிகளை ரத்துச் செய்ய வேண்டுமென்று திருத்தத்தைக் கொடுத்தார்கள். உதாரணமாக இ.பி.கோ. 107வது பிரிவு. அதைப் போன்ற காட்டுமிராண்டித்தனமான சட்டம் இருக்கவே முடியாது. நாகரிகம் உள்ள ஆட்சி அரசாங்கத்தின் சட்டப் புத்தகத்தில் அப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கவே கூடாது. நான் பப்ளிக் பிராசிகூட்டராக இருந்த காலத்தில் ஐரிஷ் ஜட்ஜ்- ஒரு ஜில்லா நீதிபதி மதுரைக்கு வந்திருந்தார். அவருக்கு ஜெயில் அப்பீல் 107 (பி) செக்ஷன்படி கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்தவன் மனுவை அனுப்பியிருக்கிறான். நான் அந்தக் காலத்தில் தீவிரமாக காங்கிரஸ் கட்சியில் இருந்தவன். அந்த நீதிபதி என்னைத் தன் அறைக்கு அழைத்து, ''நீர் ஒரு ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் என்று கேள்விப்படுகிறேன், இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சட்டத்தை உங்களுடைய ஜனநாயக நாட்டில் விட்டுவைத்திருக்கிறீர்களே?'' என்று ஐயர்லாண்டைச் சேர்ந்தவர் கேட்டார். சட்ட அமைச்சர் இச் சட்டத்தை மாற்ற முயற்சி செய்தார், தான் ஒரு சிறந்த சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது. இப்போது அவர்

ஒரு சிறந்த அமைச்சர். முன்பு கொண்டிருந்த கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். அப்படி இருக்க, அதே சீர்திருத்தத்தைக் கொண்டுவரும்போது, ஏன் ஆதரவு கொடுக்கக் கூடாது? 109 பிரிவின்படி சொத்து இல்லை என்ற காரணத்துக்காக, ஒரு சிலர் குற்றவாளியாக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். அந்த நிலைமை இன்னும் நம் நாட்டில் நீடிக்க வேண்டுமா ? இதற்கு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்தால் போதும். ஒரு நீதிபதியைப் போட்டு விசாரிக்கத் தேவை யில்லை. சட்ட இலாகா இருக்கிறது. சட்டத் துறையில் சட்டம் படித்தவர்கள் செயலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் கலந்து ஆலோசித்து ஆவன செய்தால் போதும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். மாதவன்</u> : நான் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, சட்ட இலாக்காவே இதைப்பற்றி ஆராய்ந்து நல்ல முடிவெடுக்க இருக்கிறது. இதில் உள்ள முக்கியமான பிரச்னை என்னவென்றால், நமக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இருக் கிற உறவு முறையில் இது போன்ற சட்டங்கள் குடியரசுத் தலைவருடைய அனுமதி பெறப்பட வேண்டிய சட்டங்களாகும். இப்படி குடியரசுத் தலைவரின் அனுமதி 'அசெண்ட்' பெறவேண்டிய சட்டங்களெல்லாம் அவர்களிடம் முன்கூட்டியே கலந்து பேசப்பட வேண்டும் என்ற விதி யிருக்கிறது. அந்த விதியின் பிரகாரம் நாம் அவர்களோடு கலந்து பேச வேண்டிய துர்பாக்கிய நிலையிருக்கிறது. சில நேரங்களில் நாங்களே சட்டம் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். இன்னொரு முறை இதை நாங்கள் 'லா கமிஷனுக்கு' அனுப்புகிறோம் என்கிறார்கள். இன்னொரு முறை உங்களுடைய 'டிராப்ட்' போதுமானதாக இல்லை என்று சொல்லு கிறார்கள். இப்படி ஒவ்வொரு சமயமும் ஏதாவது ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சுயமரியாதைச் சட்டத்திற்கு அவர்களுடைய அனுமதி வாங்க நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். நானே டெல்லி சென்று வாதிட்டேன். அப்போது மறைந்த சட்ட அமைச்சர் திரு. கோவிந்த மேனன் அவர்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்தார் கள். ''நானே சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவன், பெரியார் பாரம்பரியத்தைப் பின்பற்றியவன்'' என்று கூறி மிகுந்த அனுதாபம் காட்டி அனுமதி தந்தார்கள். அப்படிக் கஷ்டப்பட வேண்டிய துர்பாக்கிய நிலையில் இருக்கிறோம். இந்த மாதம் 12, 13 தேதிகளில் நடக்கவிருக்கிற மாநில சுயாட்சி மாநாட்டில் உறுப்பினரைப் போன்ற வழக்கறிஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டு இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று வாதிட வேண்டும் என்றுதான் இதைச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த மசோ தாவை நிச்சயமாக சட்ட இலாகாவே பரிசீலித்து எப்படியாவது மத்திய அரசிடம் அனுமதி வாங்கி நிறைவேற்றி விடலாம் என்று நான் நம்பு கிறேன். அவர்கள் கூறியிருக்கிற முடிவான பிரச்னை இதுதான். 'பெயிலில்' விடுவதில் மனிதத் தன்மையோடு பெயிலில் விடவேண்டும். சட்டப்படி குற்றவாளி என்று சொல்லப்படுவதற்கு முன்னால் ஒரு நபரையும் சிறையில் வைக்கக் கூடாது என்பது தான் இதன் உண்மை யான தாத்பரியம். இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

6-50 p.m.

இப்போது போலீஸ்காரர்களே குற்றமற்ற ஒருவரை 2 நாளைக்கு ஜெயிலில் வைப்பதுகூட பாவம் என்று தான் இந்த அரசாங்கம் கருதுகிறது. அண்மையில் கம்யூனிஸ்ட் நண்பர்கள் சிறையில் இருந்தார்கள். நான் திடீரென்று ஒரு நாள் சென்னைச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன். பல பேர் என்னிடத்தில் முறையிட்டார்கள். அவர்கள் உண்மையைச் சொன்னார்களா, பொய்யைச் சொன்னார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் அவர்கள் ''எங்களுக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை, இருந்தாலும் எங்களைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்'' என்று சொன்னார்கள். எனவே அடுத்த மறுநாளே அத்தனை பேரையும் விடுதலை செய்யும்படி உத்திரவிட்டோம். காவலர்கள் பல நேரங்களில் தவறு செய்யக்கூடும். நீதி மன்றத்தில் கூட தவறு செய்துவிட முடியும். நீதிபதி முன்னால் என்ன எடுத்துச் சொல்லப் படுகிறதோ அதன் அடிப்படையில் தான் அவர் தீர்ப்புச் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே இறுதியாக குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுகிற வரை, அவரைக் குற்றவாளியாகக் கருதி சிறையில் வைக்கக் கூடாது என்றுதான் நாங்களும் கருதுகிறோம். சொத்து இல்லாதவர்கள் மீது கேஸ் போடுவதென்பது காட்டுமிராண்டி காலத்தில் கூட இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்துவிட்டது. அதை நான் காட்டுமிராண்டி காலம் என்று சொல்லவில்லை. அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். இந்த மசோதாவில் உள்ள அத்தனைக் கருத்துகளும் நம்முடைய சட்ட இலாக்காவால் பரிசீலிக்கப்பட்டு, நிச்சயமாக மத்திய அரசாங்கத்தோடு வாதாடி, நம்முடைய தமிழ் நாட்டு மக்களுடைய நன்மைக்காக இதை நிறைவேற்றுவோம் என்று நான் அவருக்கு உறுதியளிக்கத் தயாராக இருக்கிறேன்.

இதைத் தவிர வேறு பிரச்னைகள் கூட இருக்கின்றன. சிவில் கோர்ட்டில் வழக்கறிஞர்களேகூட கால தமாதத்திற்குக் காரணமாக இருக்கிறார்கள். அவர்களே சில வழக்குகளை நீடித்துக் கொண்டே போக வேண்டும் என்று விரும்புகிறார்கள். இதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையைக்கூட நாம் மாற்றியாக வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழக்குகள் முடிக்கப்பட வேண்டும் என்று சிவில் புரொசிஜர் கோடில் இருக்கும்படி செய்ய வேண்டும். இப்போது இருக்கிற முறையை மாற்றியாக வேண்டும். இதற்காக உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை நானே உறுதி தர ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவின் உண்மையான உள்ளடங்கிய கருத்துக்கள் அத்தனையும் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு மனத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று அவருக்கு உறுதி கூற விரும்புகிறேன். அப்படி நிறைவேற்றித் தீருகிற வரை நாமே ஆட்சியில் தொடர்ந்து இருப்போம். மத்தியில் இருக்கிற ஆட்சியும் தொடர்ந்து அதற்கு உதவி செய்யும் என்று கூறிக்கொண்டு அப்படிப் பட்ட அதிகாரங்களைப் பெறுவதற்கும் அதற்கான ஆலோசனை கூறுவதற்கும் 12, 13-ம் தேதிகளில் நடக்க இருக்கிற மாநில சுயாட்சி மாநாட்டிற்கு வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. டி. கே. சுப்பையா : அமைச்சர் அவர்கள் சென்னை சிறைச்சாலைக்குச் சென்று பார்த்ததாகவும் அங்கே இருந்தவர்கள் முறையிட்டுக் கொண்டதன் பேரில் விடுதலை அளித்துவிட்டதாகவும் கூறினார்கள். ஆனால் திருச்சி சிறைச்சாலையைப் பொறுத்த வரையில், திரு. சுப்பையா, எம். எல். ஏ., அவர்கள் எழுதிக் கொடுத்து போராட்டத்தை வாபஸ் வாங்கிவிட்டதால்தான் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் கூறுவது சரியா அல்லது பத்திரிகைச் செய்தி சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த நாடு முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட்களைப் பொறுத்த அளவில் அவர்கள் எழுதிக் கொடுத்தார்கள், கட்சிச் சார்பில். சென்னைச் சிறைச்சாலைக்குள்ளே போன பிறகு சில பேருக்கு மனமாற்றம் ஏற்பட்டிருக்கலாம். 1962-ஆம் ஆண்டில் நான் கூட சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறேன். என்னோடு கூட வந்தவர்களில் சிலருக்கு அப்போது மன மாறுதல் ஏற்பட்டு அவர்கள் எல்லாம் வெளியே போக வேண்டும் என்று விரும்பினார்கள். நாங்களும் சரி என்று சொல்லி, போகிறவர்கள் போங்கள் என்று சொல்லிவிட்டோம். அப்படி 1000-க்கும் அதிகமானவர்கள் போய்விட்டார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : இதோடு சட்ட அமைச்சர் அவர்கள் வேறு ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றியும் கவனம் செலுத்த வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற சட்டப்படி பிச்சைக்காரர்களாக இருப்பவர்களைத் தண்டித்தால் அவர்களுக்கு 50 ரூபாய் அபராதம் விதித்தால்தான் சிறைச்சாலைக்குக்கொண்டு போகலாம் என்றிருக்கிறது. பிச்சைக்காரர்களிடம் பணம் ஏது ? எனவே 50 ரூபாய் அபராதம் போடுவது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

*THIRU D. SANTOSHAM : Relying on the categorical assurance given by the Hon. Minister that all these amendments will be considered and brought up at an early date, I thankfully withdraw my Bill. 7-00 p.m.

The Bill was, by leave, withdrawn.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4-00 p.m. on Tuesday, the 8th September 1970.

The House then adjourned.